பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
Chief Secretary's Secretariat, Northern Provincial Council

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
Provincial Council Complex, A9 Road, Kaithady

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/A&P/04/12/CIR/2020 25.11.2020

மாகாண நிதிச் சுற்று நிருப கடித இல: PF/CL/AP/04/2020

அமைச்சுக்களின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## ஆளுக்குரிய வேதனாதிகள் கொடுப்பனவு

மேற்படி விடயம் தொடர்பாக பொதுத் திறைசேரியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2010.02.19 ஆம் திகதிய சுற்றறிக்கை இலக்கம் DMA/2020(4) இன் கீழ் தங்களின் அவதானம் ஈர்க்கப்படுகின்றது.

அச்சுற்றறிக்கையில் குறிப்பிட்டவாறு ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேடு பேணல் மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவேட்டில் உட்சேர்க்க வேண்டிய விபரங்கள், சம்பளப்பட்டியல் பொதியில் (GPS) சம்பளச் செயன் முறையினை செயற்படுத்தல், அரச ஊழியருக்கு செலுத்தப்பட்ட முற்பணம், வட்டி அறவீடு மற்றும் அது தொடர்பான பதிவேடுகள், அரச கணக்குகள் சுற்றறிக்கையில் 171/2004 இன் பிரகாரம் GPS மென்பொருள் பயன்படுத்தப்படும்போது எடுக்கப்பட வேண்டிய நிருவாக நடைமுறைகள் CIGAS மென்பொதியூடாக வங்கிகள் மூலம் சம்பளம் செலுத்துதல், இலங்கை வங்கிகளுக்கிடையே கொடுப்பனவு முறைகளுக்கு (SIIPs) அமைவாக CIGAS மூலம் சம்பளம் செலுத்துதல், SLIPs பாவனையின் போது பின்பற்றப்பட வேண்டிய நிர்வாக உபாய முறைகள் மற்றும் தாபனப் பிரிவிலிருந்து கணக்கு மற்றும் சம்பளப் பிரிவுக்கு தகவலைச் சமர்ப்பித்தல் என்ற விடயங்களின் மீது தெளிவான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதுடன் தங்களது உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் இவ்விடயம் மீது எவ்வாறு உள்ளகக் கணக்காய்வினை மேற்கொண்டு சம்பளக் கொடுப்பனவு முறைமையின் உள்ளகக்கட்டுப்பாடு தொடர்பில் பரிசீலனை செய்யலாம் எனவும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இவ் விடயங்கள் மீது உடனடிக் கவனம் செலுத்தப்படுவதுடன் பின்வரும் விடயங்களின் மீதும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

1. தற்போது வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களங்களில் ஊழியர்களின் அனைத்து மட்டங்களையும் உள்ளடக்கி 33,896 உத்தியோகத்தர்களுக்கு ஆளுக்குரிய வேதனாதிகள் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. எனவே ஆளுக்குரிய வேதனாதிகள் கொடுப்பனவு தொடர்பில் தங்களது அமைச்சின் மற்றும் திணைக்களத்தின் உண்மையாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ஆளணிகளின் எண்ணிக்கை, விதவைகள் அநாதைகள் கொடுப்பனவுகளுக்கான ஆளணிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் சரியாக பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும் என்பதுடன் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு நோக்கத்திற்கு இவை சரியாக கணக்கிடப்பட்டதை உறுதிப்படுத்தல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முறையாக அனுமதி பெறப்படாத மற்றும் அனுமதிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக உள்ள ஆளணிக்கு கொடுப்பனவு செய்யப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

2. மாகாணக் கல்வித்திணைக்களம், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் என்பவற்றின் கீழேயே அதிகமான அரச ஊழியர்கள் பணியாற்றுவதால் வலயக்கல்வி அலுவலகங்களிலும் மற்றும் பிராந்திய சுகாதார சேவைப் பணிமனைகளிலும் பொது வைத்தியசாலைகளிலும் மிகவும் நுட்பமான மற்றும் கூடிய மேற்பார்வை கொண்டதுமான அகக்கட்டுப்பாட்டு முறைமையினை ஏற்படுத்திக் கொள்வதுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒரு உத்தியோகத்தரின் நிலுவை சம்பளத்தினை நடைமுறைமாத GPS மென் பொதியூடாக வழங்காது அத்தகைய விபரங்கள் தனியாகத் தயாரிக்கப்பட்டு பிரத்தியேகமான சம்பளப் பட்டியல் மூலம் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் காலத்திற்குக் காலம் வழங்க வேண்டிய வேதன நிலுவைக் கொடுப்பனவு தொடர்பாக உரிய விபரங்களை மாகாணத் திறைசேரிக்கு வழங்கி தேவைப்படும் கட்டுநிதியைப் பெற்று விசேட சம்பளப் பட்டியலின் ஊடாக கொடுப்பனவு செய்யப்படல் வேண்டும். மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் ஆசிரியர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவுக்கான மென் பொதியினை தனியாகவும் ஏனைய அலுவலருக்குரிய சம்பளக் கொடுப்பனவுக்கான மென் பொதியினை தனியாகவும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ் மென் பொதியில் ஒரு வருடத்திற்கு உட்பட்ட சம்பள ஏற்றத்தின் நிலுவை மட்டுமே ஒரு குறித்த மாதத்தில் நிலுவையாக காட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட சம்பள ஏற்ற அதிகரிப்பு நிலுவைகள் விசேட சம்பளப் பட்டியல் மூலம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

3. நடைமுறைச் செலவினத்தில் 90% க்கு மேல் சம்பள கொடுப்பனவுக்கே மேற்கொள்ளப்படுவதால் பணியாளர்களின் எண்ணிக்கை அதிகமாக காணப்படும் இடங்களில் மோசடிகளும் தவறுகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுவதால் கணக்காளர்கள் மற்றும் நிதி உதவியாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் ஊடாக இச்சம்பள தயாரிப்பு மேற்கொள்ளும் போது மொத்த சம்பளக் கொடுப்பனவானது குறுக்குப் பதிவு கொடுப்பனவு, வங்கி மற்றும் ஏனைய முகவர்களுக்கு அனுப்பும் தொகைக்கும் சமமானதாக இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

4. நன்கு அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களை சம்பளப் பட்டியல் (GPS) மென்பொதி கையாளுகை, CIGAS என்பவற்றில் ஈடுபடுத்துவதுடன் கடமைப் பட்டியல்களை சுழற்சி முறைமையின் ஊடாக வருடாந்தம் மாற்றியமைக்கப்பட்டு உள்ளக இடமாற்றத்தினையும்

நடைமுறைப்படுத்தி அனைத்து அலுவலர்களும் வேலைகளில் பூரண அறிவினையும் பரீட்சயத்தினையும் பெற்றுக் கொள்வதனை உறுதிப்படுத்தல்.

5. இச்செயன் முறையில் அனுபவம் குறைந்த உத்தியோகத்தர்களின் விடயத்தில் GPS, CIGAS போன்ற பயிற்சிகள் வழங்குவதற்கு முகாமைத்துவ பயிற்சி அலகுடன் பயிற்சியினைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6. மாகாணத் திறைசேரியிடம் இருந்து ஆளுக்குரிய வேதனாதிகளுக்குரிய கட்டுநிதி பெற்றுக் கொள்வதற்கு 2021 ஜனவரி மாதத்திலிருந்து GPS மென் பொதியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பின்வரும் கோவைகளின் மென்பிரதியினை மாகாணத் திறைசேரியின் மின்னஞ்சல் முகவரிக்கு (npctreasury@gmail.com) ஒவ்வொரு மாதமும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| 1) PYMROLL.DBF | 5. ACCOUNT.RPT |
| 2) PYREMPMA.DBF | 6. SALSUMM.RPT |
| 3) REM FILE.DBF | 7. CATGSALR.RPT |
| 4) PYRACCT2.DBF | 8. SALRECON.RPT |

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்

அ. பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடக்கு மாகாணம்

1. கௌரவ ஆளுநரின் செயலாளர், வடமாகாணம் -கௌரவ ஆளுநருக்குஅறியத்தருவதற்காக
2. உதவிக்கணக்காய்வாளர் தலைமை அதிபதி, வடமாகாணம் – தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், வடமாகாணம் - தகவலுக்கும் நடவடிக்கைக்குமாக

பிரதம செயலாளர்
ප්‍රධාන ලේකම්
Chief Secretary
Tel : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
E-mail: chiefsecnpc@gmail.com

பிரதிப் பிரதம செயலாளர்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම්
Deputy Chief Secretary
Tel : 021 222 0850 (Dir)
: 021 222 0854(Gen)
Fax : 021 222 0853
E-mail: npctreasury@gmail.com